பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
21 08 2017 6 30
திங்கட்கிழமை மாலை

<u>தலைப்புச்செய்திகள்</u>

- அஇஅதிமுக-வின் திரு எடப்பாடி பழனிசாமி மற்றும் திரு ஓ பன்னீர்செல்வம் தலைமையிலான இரு அணிகளும் இன்று இணைந்தன.
- தமிழக துணை முதலமைச்சராக திரு ஓ பன்னீர்செல்வமும், அமைச்சராக திரு கே பாண்டியராஜனும் இன்று பதவியேற்றுக் கொண்டனர்.
- தமிழக அமைச்சரவையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.
- முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சருக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.
- வேளாண் துறையின் மண்வள அட்டை மற்றும் பயிர் காப்பீட்டு திட்டங்களின் செயல்பாடுகளை பிரதமர் இன்று ஆய்வு செய்தார்.

<u>இனி விரிவான செய்திகள்</u> ----

[]<<<>>>>[]

தமிழக துணை முதலமைச்சராக திரு ஓ பன்னீர்செல்வம் இன்று மாலை பொறுப்பேற்றுக் கொண்டார். சென்னையில் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அவருக்கு ஆளுநர் திரு வித்யாசாகர் ராவ் பதவிப்பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

திரு கே பாண்டியராஜன் தமிழ் ஆட்சிமொழி மற்றும் தொல்லியல்துறை அமைச்சராக பதவியேற்றுக் கொண்டார்.

இதையடுத்து தமிழக அமைச்சரவையில் இடம்பெற்றவர்களின் எண்ணிக்கை 33 ஆக உயர்ந்துள்ளது.

தமிழக அமைச்சரவையில் துணை முதலமைச்சர் பொறுப்பு வகிப்பது இது இரண்டாவது முறையாகும்.

முன்னதாக முதலமைச்சர் திரு எடப்பாடி பழனிசாமி, திரு ஓ பன்னீர்செல்வம் ஆகியோர் தலைமையில் இயங்கிய அஇஅதிமுக-வின் இரு அணிகளும் இன்று முறையாக இணைந்தன.

இரு தலைவர்களும் தங்கள் ஆதரவாளர்களுடன் சென்னையில் கட்சியின் தலைமையகத்தில் கூடி இணைப்பு தொடர்பான அறிவிப்பை வெளியிட்டனர்.

நிகழ்ச்சியில் பேசிய திரு எடப்பாடி பழனிசாமி, அஇஅதிமுக-வின் ஒருங்கிணைப்பாளராக திரு ஓ பன்னீர்செல்வமும், இணை ஒருங்கிணைப்பாளராக தாமும் செயல்படப் போவதாக அறிவித்தார்.

திரு கே பி முனுசாமி, திரு வைத்திலிங்கம் ஆகியோர் துணை ஒருங்கிணைப்பாளராக செயல்பட இருப்பதாக அவர் தெரிவித்தார்.

மேலும் 11 பேர் கட்சியின் வழிகாட்டுக் குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட உள்ளனர்.

பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளை கட்சி கடந்து வந்திருப்பதாக திரு எடப்பாடி பழனிச்சாமி குறிப்பிட்டார்.

<u>( வாய்ஸ்பைட் - எடப்பாடி பழனிச்சாமி )</u>

முன்னதாக பேசிய திரு ஓ பன்னீர்செல்வம், இரு அணிகளின் இணைப்பைத் தொடர்ந்து தமது மனபாரம் குறைந்துவிட்டதாகக் குறிப்பிட்டார்.

<u>( வாய்ஸ்பைட் - ஓ பன்னீர்செல்வம் )</u>

இரு அணிகளின் இணைப்பைத் தொடர்ந்து கட்சித் தலைவர்கள் மெரினா கடற்கரையில் உள்ள மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இரு அணிகளின் இணைப்பை அடுத்து தமிழக அமைச்சரவையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. துணை முதலமைச்சராக பதவியேற்றுள்ள திரு ஓ பன்னீர்செல்வத்துக்கு நிதி, வீட்டுவசதி, நகர்புற மேம்பாடு உள்ளிட்ட துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

திரு கே பாண்டியராஜன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தொல்லியல் துறை அமைச்சராக பொறுப்பு வகிப்பார்.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு கே ஏ செங்கோட்டையனிடமிருந்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை, திரு பாலகிருஷ்ணரெட்டிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அவர் இதுவரை வகித்து வந்த கால்நடை பராமரிப்புத்துறை திரு உடுமலை ராதாகிருஷ்ணனுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தொழில்துறை அமைச்சர் திரு எம் சி சம்பத்திடமிருந்த சுரங்க மற்றும் கனிம வளத்துறை, சட்ட அமைச்சர் திரு சி வி சண்முகத்திற்கு கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>>[]

முதலமைச்சர் திரு எடப்பாடி பழனிச்சாமிக்கும், துணை முதலமைச்சர் பதவியேற்றுள்ள திரு ஓ பன்னீர்செல்வத்துக்கும் பிரதமர் திரு நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மத்திய அரசு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கும் என்று கூறியுள்ளார்.

வரும் ஆண்டுகளில் தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் உச்சத்தை எட்டும் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தமிழக அமைச்சரவையில் இன்று புதிதாக பொறுப்பேற்றுள்ள இதர அமைச்சர்களுக்கும் அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மத்திய இணை அமைச்சர் திரு பொன் ராதாகிருஷ்ணனும், பிஜேபி மாநில தலைவர் திருமதி தமிழிசை சவுந்தர்ராஜனும், அஇஅதிமுக-வின் இரு அணிகளும் இணைக்கப்பட்டதற்கும், துணை முதலமைச்சராக திரு ஓ பன்னீர்செல்வத்துக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

[]<<<>>>>[]

மக்கள் பிரச்சினையில் அஇஅதிமுக அரசு அக்கறை செலுத்தவில்லை என்றும், அக்கட்சியில் ஏற்பட்டுள்ள குழப்பங்களால் மக்களின் அத்தியாவசிய பிரச்சினைகளில் கவனம் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் திமுக செயல் தலைவர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக மக்கள் இந்த ஆட்சி குறித்து உரிய முடிவெடுப்பார்கள் என்று கூறினார்.

[]<<<>>>>[]

அஇஅதிமுக-வின் இரு அணிகளின் இணைப்பு தமிழகத்தில் அக்கட்சியின் ஆட்சிக்கு பலம் சேர்த்திருப்பதாக தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் திரு ஜி கே வாசன் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>>[]

பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு, அஇஅதிமுக அணிகள் இணைப்பு சந்தர்ப்பவாத அரசியல் என்று கூறியுள்ளார்.

தமிழக அரசு மக்கள் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

[]<<<>>>>[]

வேளாண் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் மண்வள அட்டைகள் திட்டம் மற்றும் பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டம் ஆகியவை குறித்து பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று புதுதில்லியில் ஆய்வு மேற்கொண்டார்.

மண்வளத்தை பாதுகாப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்று கூறிய பிரதமர், ஒவ்வொரு பகுதியிலும் வெவ்வேறு காலகட்டத்தில் எடுக்கப்படும் மண் மாதிரிகளை ஆய்வு செய்து சாகுபடிக்கு ஏற்ற வகையில் விளை நிலங்களை பண்படுத்த வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நவீன தொழில்நுட்ப முறைகளை விவசாயிகளிடையே ஊக்குவிப்பதற்கான முயற்சியை வேளாண் அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

16 மாநிலங்கள் மற்றும் யுனியன் பிரதேசங்ளிலிருந்து எடுக்கப்பட்ட மண் மாதிரிகள் குறித்த தகவல்களை ஆய்வு செய்யும் பணியை பிரதமர் பார்வையிட்டார்.

பிரதமரின் பயிர்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 2016-ஆம் ஆண்டு கரீப் பருவத்திலும், 2016-17-ஆம் ஆண்டு ரபீ பருவத்திலும் ஏழாயிரத்து 700 கோடி ரூபாய் அளவுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும், இதனால் 90 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள் என்றும் அதிகாரிகள் பிரதமரிடம் தெரிவித்தனர்.

பயிர் காப்பீட்டுத் தொகையை விரைந்து வழங்கும் வகையில் இது குறித்த தகவல்கள் சேகரிக்கும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

[]<<<>>>>[]

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் கைதிகளான ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோரை முன்கூட்டியே விடுவிக்க முடியாது என தமிழக அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் மீண்டும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வழக்கில் மத்திய மாநில அரசுகள் பதிலளிக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அதன்படி தமிழக அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட புதிய பதில் மனுவில், ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதிகளை விடுவிப்பது தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், அவர்களை விடுவிக்க முடியாது என தெரிவித்துள்ளது.

இந்த வழக்கு நீதிபதி திரு செல்வம், திரு கலையரசன் அடங்கிய அமர்வு முன் நாளை விசாரணைக்கு வருகிறது.

[]<<<>>>>[]

மத்திய அரசுப் பணிகளில் இதர பிற்படுத்தபட்டோர் இடஒதுக்கீடு பெறுவதற்கான வருமான உச்சவரம்பை 15 லட்சம் ருபாயாக உயர்த்த வேண்டுமென்று திமுக செயல் தலைவர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர், பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில்., ஓய்வுபெற்ற நீதிபதி ஈஸ்வரய்யா தலைமையிலான ஆணையம், அளித்த பரிந்துரையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டில் கிரிமிலேயர் என்ற வருமான கட்டுப்பாட்டை விதிப்பது அரசியல் சட்டத்துக்கு எதிரானது என்றும், இதனை நீக்குவதற்கான நடவடிக்கைகளையும் பிரதமர் எடுக்க வேண்டுமென்றும் திரு ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>>[]

தமிழ்நாடு அரசு தேர்வாணையம் கடந்த ஆண்டு ஜூலை மாதம் நடத்திய குரூப்-ஒன்று தேர்வு விடைத்தாள் முன்கூட்டியே வெளியானது குறித்து விசாரணை செய்து அறிக்கை அளிக்குமாறு சென்னை மாநகர காவல்துறை ஆணையருக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரித்த திரு எஸ் எம் சுப்ரமணியம், மூன்று வாரத்தில் விசாரணை அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு, விசாரணையை அடுத்த மாதம் 11-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

[]<<<>>>>[]

விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி சென்னையில் எத்தனை சிலைகள் வைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது குறித்து தெரிவிக்குமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

[]<<<>>>>[]

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் கூட்டமைப்பான ஜாக்டோ-ஜியோ நிர்வாகிகளை அழைத்துபேசி. அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

[]<<<>>>>[]

அரசுப் பணியாளர்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற தமிழக அரசு முன்வர வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு முத்தரசனும் வலியுறுத்தியுள்ளார்.

[]<<<>>>>[]

சுதந்திரப் போராட்ட வீரர் ஜீவானந்தத்தின் 111-வது பிறந்த நாளை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில், அவரது நினைவு மண்டபத்தில் உள்ள உருவச்சிலைக்கு மாவட்ட ஆட்சியர் திரு சஜ்ஜன் சிங் சவான் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

[]<<<>>>>[]

சிவகங்கை மாவட்டத்தில் தேசிய திறனாய்வுத் தேர்வுக்கு இன்று முதல் விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>>[]

சேலம் - நாமக்கல் தேசிய நெடுஞ்சாலையில் லாரி ஒன்றின் டயர் வெடித்து தாறுமாறாக ஓடியதால் ஏற்பட்ட விபத்தில் சாலையை கடப்பதற்காக நின்றிருந்த இரண்டு பெண்கள் உயிரிழந்தனர்.

[]<<<>>>>[]

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தில் தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் கட்டப்பட்ட தனிநபர் இல்ல கழிவறைகளை மாவட்ட ஆட்சியர் திருமதி சுந்தரவல்லி இன்று ஆய்வு செய்தார்.

***End of News***